No. of Printed Pages : **24**

**6657**

**A**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# PART - III

# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.



https://www.tamilnaduboard.com

**1.** A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4 : 2 : 3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது 'A' விலகுகிறார். B மற்றும் C -யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் :

(அ) 2 : 3 (ஆ) 4 : 2 (இ) 2 : 1 (ஈ) 3 : 2

A, B, C are partners sharing profits and losses in the ratio of 4 : 2 : 3. 'A' retires. The new profit sharing ratio between B and C will be :

(a) 2 : 3 (b) 4 : 2 (c) 2 : 1 (d) 3 : 2

**2.** கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு, இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 -ன் படி வழங்கப்படும் வட்டி வீதம் :

(அ) ஆண்டுக்கு 5% (ஆ) ஆண்டுக்கு 8%

(இ) ஆண்டுக்கு 6% (ஈ) ஆண்டுக்கு 12%

As per the Indian Partnership Act, 1932, the rate of interest allowed on loans advanced by partners is :

(a) 5% per annum (b) 8% per annum

(c) 6% per annum (d) 12% per annum

**3.** உரிமையாளரின் சொத்துகள் ₹ 5,00,000 மற்றும் பொறுப்புகள் ₹ 2,00,000 எனில் அவருடைய முதல்தொகை :

(அ) ₹ 7,00,000 (ஆ) ₹ 5,00,000 (இ) ₹ 3,00,000 (ஈ) ₹ 2,00,000

The amount of Capital of the proprietor, if his Assets are ₹ 5,00,000 and Liabilities are ₹ 2,00,000 :

(a) ₹ 7,00,000 (b) ₹ 5,00,000 (c) ₹ 3,00,000 (d) ₹ 2,00,000

**4.** நிதி என்னும் சொல் குறிப்பிடுவது :

(அ) நிலைச் சொத்துகள் (ஆ) நடப்புப் பொறுப்புகள்

(இ) நீண்டகாலச் சொத்துகள் (ஈ) நடைமுறை முதல்

The term "fund" refers to :

(a) Fixed Assets (b) Current Liabilities

(c) Non-current Assets (d) Working Capital



https://www.tamilnaduboard.com

5. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது ?

(அ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து

(ஆ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து

(இ) நற்பெயரினை வாங்க முடியாது

(ஈ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து

Which of the following statement is true ?

(a) Goodwill is a fictitious asset

(b) Goodwill is an intangible asset

(c) Goodwill cannot be acquired

(d) Goodwill is a current asset

6. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில், நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 85 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு ?

(அ) 15 (ஆ) 185 (இ) 100 (ஈ) 115

In a Common-size Balance Sheet, if the percentage of non-current Asset is 85, what would be the percentage of Current Assets ?

(a) 15 (b) 185 (c) 100 (d) 115

7. விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்க விலை ₹ 3,00,000; அவ்வாண்டின் தொடக்கச் சரக்கிருப்பு ₹ 60,000; அவ்வாண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹ 40,000 எனில், சரக்கிருப்பு சுழற்சி விகிதம் :

(அ) 6 மடங்கு (ஆ) 2 மடங்கு (இ) 8 மடங்கு (ஈ) 3 மடங்கு

Cost of Revenue from operations ₹ 3,00,000; Inventory in the beginning of the year ₹ 60,000; Inventory at the close of the year ₹ 40,000. Inventory turnover ratio is :

(a) 6 times (b) 2 times (c) 8 times (d) 3 times



https://www.tamilnaduboard.com

8. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை, மறுவெளியீடு செய்த பிறகு, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது :

(அ) பத்திர முனைமக் கணக்கிற்கு (ஆ) பொதுக் காப்பு கணக்கிற்கு

(இ) உபரி கணக்கிற்கு (ஈ) முதலினக் காப்பு கணக்கிற்கு

After the Forfeited shares are Reissued, the balance in the Forfeited shares account should be transferred to :

(a) Securities Premium account (b) General Reserve account

(c) Surplus account (d) Capital Reserve account

9. F11 சாவியின் பயன்பாடு :

(அ) நிறுவன கட்டமைப்பு

(ஆ) நிறுவனப் பண்புக்கூறுகள்

(இ) சட்டம் மற்றும் வரிவிதிப்பு பண்புக்கூறுகள்

(ஈ) கணக்கியல் சான்றாவணங்கள்

Function key F11 is used for :

(a) Company Configuration

(b) Company Features

(c) Statutory and Taxation features

(d) Accounting Vouchers

10. கூட்டாளி விலகலின்போது பொது காப்பு மாற்றப்படுவது :

(அ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு

(ஆ) அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு

(இ) நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு

(ஈ) மறுமதிப்பீட்டுக் கணக்கிற்கு

On retirement of a partner, General Reserve is transferred to the :

(a) Capital account of the continuing partners

(b) Capital account of all the partners

(c) Memorandum Revaluation account

(d) Revaluation account



https://www.tamilnaduboard.com

**11.** ஒரு மன்றத்தில் உள்ள 300 உறுப்பினர்கள் ஆண்டு சந்தாவாக ₹ 100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ₹ 200. முன்கூட்டி பெற்ற சந்தா ₹ 300. வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும்.

(அ) ₹ 29,900 (ஆ) ₹ 30,000 (இ) ₹ 30,100 (ஈ) ₹ 30,700

There are 300 members in a club each paying ₹ 100 as annual subscription. Subscription due but not received for the Current Year is ₹ 200. Subscription received in advance is ₹ 300. Find out the amount of subscription to be shown in the Income and Expenditure account.

(a) ₹ 29,900 (b) ₹ 30,000 (c) ₹ 30,100 (d) ₹ 30,700

**12.** புற அக பொறுப்புகள் விகிதம் அளவிடுவது :

(அ) இலாபம் ஈட்டும் திறன்

(ஆ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன்

(இ) செயல்திறன்

(ஈ) நீண்ட காலக் கடன் தீர்க்கும் திறன்

Debt Equity ratio is a measure of :

(a) Profitability

(b) Short term solvency

(c) Efficiency

(d) Long term solvency

**13.** எதிர்ப்பதிவு சான்றாவணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது ?

(அ) அறிக்கைகள்

(ஆ) தலைமைப் பதிவு

(இ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது

(ஈ) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம்

Contra Voucher is used for :

(a) Reports

(b) Master entry

(c) Credit purchase of assets

(d) Withdrawal of cash from bank for office use



https://www.tamilnaduboard.com

**14.** மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது :

(அ) நட்டம் (ஆ) செலவு

(இ) ஆதாயம் (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

On Revaluation, the increase in the value of assets leads to :

(a) Loss (b) Expense

(c) Gain (d) None of these

**15.** முதலைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள் :

(அ) பொறுப்புகள் (ஆ) நட்டம் (இ) இலாபம் (ஈ) ரொக்கம்

The Excess of Assets over Capital is :

(a) Liabilities (b) Loss (c) Profit (d) Cash

**16.** பின்வருவனவற்றுள் வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும் :

(அ) தணிக்கைக் கட்டணம் (ஆ) மின் கட்டணம்

(இ) ஆயுள் உறுப்பினர் கட்டணம் (ஈ) தொலைபேசிக் கட்டணம்

Find the odd one out from the following.

(a) Audit fees (b) Electricity charges

(c) Life membership fees (d) Telephone charges

**17.** விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாதபோது, அது மாற்றப்படும் கணக்கு :

(அ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு

(ஆ) வங்கி க/கு

(இ) பிற கூட்டாளிகளின் முதல் க/கு

(ஈ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு

If the final amount due to a retiring partner is not paid immediately, it is transferred to :

(a) Retiring partner's Loan A/c

(b) Bank A/c

(c) Other partners' Capital A/c

(d) Retiring partner's Capital A/c



https://www.tamilnaduboard.com

**18.** கூட்டாளி சேர்ப்பின் போது புதிய கூட்டாளி நற்பெயருக்காகக் கொண்டு வரும் தொகை யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும் ?

(அ) புதிய கூட்டாளி (ஆ) அனைத்து கூட்டாளிகள்

(இ) தியாகம் செய்த கூட்டாளிகள் (ஈ) பழைய கூட்டாளிகள்

At the time of admission, the goodwill brought by the new partner may be credited to the Capital accounts of :

(a) the new partner (b) all the partners

(c) the sacrificing partners (d) the old partners

**19.** பின்வருவனவற்றில் எது இலாப நட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும் ?

(அ) கூட்டாளியின் ஊதியம் (ஆ) அலுவலகச் செலவுகள்

(இ) வங்கிக்கடன் மீதான வட்டி (ஈ) பணியாளர் ஊதியம்

Which of the following is shown in Profit and Loss Appropriation account ?

(a) Partner's salary (b) Office expenses

(c) Interest on bank loan (d) Salary of staff

**20.** சராசரி இலாபம் ₹ 50,000 மற்றும் சாதாரண இலாபம் ₹ 40,000 -ஆக இருக்கும்போது, உயர் இலாபம் :

(அ) ₹ 10,000 (ஆ) ₹ 25,000 (இ) ₹ 15,000 (ஈ) ₹ 5,000

When the average profit is ₹ 50,000 and the normal profit is ₹ 40,000, Super Profit is :

(a) ₹ 10,000 (b) ₹ 25,000 (c) ₹ 15,000 (d) ₹ 5,000



https://www.tamilnaduboard.com

## பகுதி - II / PART - II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **Compulsory.**

**21.** இரட்டைப்பதிவு முறை பின்பற்றாதபோது சிறிய அளவிலான தனி வணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.

State the accounts generally maintained by a small sized sole trader when double entry accounting system is not followed.

**22.** இலாப நோக்கமற்ற அமைப்பின் வருவாயின செலவுகள் ஏதேனும் நான்கினைத் தரவும்.

Give four examples for revenue expenditure of not-for-profit organisation.

**23.** கூட்டாண்மை நிறுவனத்தின் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைத் தரவும்.

State any two circumstances under which goodwill of a partnership firm is valued.

**24.** இறந்த கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையினை அவருடைய நிறைவேற்றாளர் கணக்கிற்கு மாற்றுவதற்குரிய குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

Give the journal entry to be passed to transfer the amount due to the deceased partner to the executor of the deceased partner.

**25.** மிகை ஒப்பம் என்றால் என்ன ?

What is over-subscription ?

**26.** விரைவு விகிதம் என்றால் என்ன ?

What is Quick Ratio ?

**27.** ஏதேனும் ஐந்து கணக்கியல் அறிக்கைகளைக் கூறுக.

State any five accounting reports.



https://www.tamilnaduboard.com

**28.** பின்வரும் தகவல்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2021 ஜனவரி 1 அன்று, முதல் | 2,60,000 |
| 2021 டிசம்பர் 31 அன்று, முதல் | 3,60,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 20,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 50,000 |

From the following particulars ascertain profit or loss.

| **Particulars** | ₹ |
|---|---|
| Capital as on 1st January 2021 | 2,60,000 |
| Capital as on 31st December 2021 | 3,60,000 |
| Additional Capital introduced during the year | 20,000 |
| Drawings made during the year | 50,000 |

**29.** ராம் மற்றும் ஷியாம் இருவரும் கூட்டாளிகள். ராம் ஒவ்வொரு அரையாண்டின் தொடக்கத்திலும் ₹ 12,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 10%. 2021 டிசம்பர் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீதான வட்டியினை சராசரி காலமுறையைப் பயன்படுத்திக் கணக்கிடவும்.

Ram and Shyam are partners. Ram withdraws ₹ 12,000 at the beginning of each half year. Interest on drawings is chargeable @10% p.a. Calculate interest on drawings for the year ending 31st December 2021 using average period method.

**30.** அருள் வணிக நிறுவனத்தின் நற்பெயர் ₹ 1,20,000. சராசரி இலாபம் ₹ 40,000. கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கையைக் கணக்கிடவும்.

Value of the goodwill of Arul Enterprises is ₹ 1,20,000, Average profit is ₹ 40,000. Calculate the number of years of purchase.



https://www.tamilnaduboard.com

## பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question number **40** is **Compulsory**.

**31.** இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமைபெறா பதிவேடுகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?

What are the differences between double entry system and incomplete records ?

**32.** இலாப நோக்கமற்ற அமைப்பில் கீழ்க்காணும் செலவுகள், முதலினமா அல்லது வருவாயினமா என வகைப்படுத்துக.

(i) மதிப்பூதியம்

(ii) விளையாட்டு உபகரணம் வாங்குதல்

(iii) நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குதல்

Classify the following expenditure of not-for-profit organisation as Capital or Revenue.

(i) Honorarium

(ii) Purchase of sports equipment

(iii) Purchase of books for library

**33.** அந்தோணி மற்றும் அக்பர் என்ற இரு கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018 ஜனவரி 1 அன்று அவர்களின் முதல் கணக்குகளின் இருப்புகள், அந்தோணி ₹ 60,000 மற்றும் அக்பர் ₹ 40,000 ஆகும். 2018 ஏப்ரல் 1 அன்று அந்தோணி கூடுதல் முதலாக ₹ 10,000 கொண்டு வந்தார். அவ்வாண்டில் அக்பர் ₹ 5,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். 2018 டிசம்பர் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிடவும்.

Antony and Akbar were partners who shared profits and losses in the ratio of 3 : 2. Balance in their Capital account on 1st January 2018 was, Antony ₹ 60,000 and Akbar ₹ 40,000. On 1st April 2018 Antony introduced additional capital of ₹ 10,000. Akbar introduced additional capital of ₹ 5,000 during the year. Calculate interest on capital at 6% p.a. for the year ending 31st December 2018.



https://www.tamilnaduboard.com

**34.** நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.

State any six factors determining Goodwill.

**35.** சாம் மற்றும் ஜோஸ் என்னும் கூட்டாளிகள் 3 : 2 என்னும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2018 ஏப்ரல் 1 அன்று ஜோயல் என்பவரை கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். ஜோயல் கூட்டாண்மையில் சேர்ந்த அன்று நிறுவன ஏடுகளில் நற்பெயர் ₹ 20,000 ஆக இருந்தது. மாறுபடும் முதல் முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுவதாகக் கருதி கூட்டாளிகளின் பின்வரும் முடிவுகளின்படி குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(அ) ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுவது.

(ஆ) ஏட்டில் உள்ள நற்பெயரில் ₹ 10,000 -ஐ போக்கெழுதுவது.

Sam and Jose are partners in a firm sharing profits and losses in the ratio of 3 : 2. On 1$^{st}$ April 2018, they admitted Joel as a partner. On the date of Joel's admission, goodwill appeared in the books of the firm as ₹ 20,000. Assuming that the accounts are maintained on Fluctuating Capital method, pass the necessary journal entries if the partners decided to :

(a) Write off the entire amount of existing goodwill.

(b) Write off ₹ 10,000 of the existing goodwill.

**36.** அழைப்பு முன்பணம் குறித்து சுருக்கமாக எழுதவும்.

Write a brief note on calls in advance.



https://www.tamilnaduboard.com

**37.** குமார் நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| விவரம் | 2017-18 ₹ |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 |
| இதர வருமானம் | 20,000 |
| செலவுகள் | 3,00,000 |

From the following particulars of Kumar Ltd., prepare a Common-size income statement for the year ended 31st March 2018.

| Particulars | 2017-18 ₹ |
|---|---|
| Revenue from operations | 5,00,000 |
| Other income | 20,000 |
| Expenses | 3,00,000 |

**38.** விவின், ஹரி மற்றும் ஜாய் என்ற கூட்டாளிகள் சம விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டத்தினைப் பகிர்ந்து வருகின்றனர். 31-3-2017 அன்று ஹரி விலகினார். அவர் விலகிய நாளில், நிறுவனத்தின் ஏடுகளில் பொதுகாப்பு ₹ 60,000 காட்டியது. பொதுக்காப்பை மாற்றுவதற்கான குறிப்பேட்டுப் பதிவைத் தரவும்.

Vivin, Hari and Joy are partners sharing profits and losses equally. On 31-3-2017 Hari retired. On the date of retirement, the books of the firm showed a general reserve of ₹ 60,000. Pass the journal entries to transfer the general reserve.

**39.** Tally ERP 9 -ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளைக் குறிப்பிடவும்.

Mention the commonly used Voucher types in Tally ERP 9.

**40.** சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டி செலுத்திய செலவுகள் நீர்மைச் சொத்தாகக் கருதப்படுவதில்லை. காரணம் கூறவும்.

Inventory and Prepaid expenses are not considered as Liquid Assets - State reasons.



https://www.tamilnaduboard.com

## பகுதி - IV / PART - IV

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) 2018, ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ₹ 1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளை பராமரிக்கவில்லை. 2019, மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கை ரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ₹ 30,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

**அல்லது**



https://www.tamilnaduboard.com

(ஆ) இராஜன் மற்றும் செல்வா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3 : 1 விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். அவர்களது 31-03-2017 நாளன்றைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | கட்டடம் | 25,000 |
| இராஜன் | 30,000 | | அறைகலன் | 1,000 |
| செல்வா | 16,000 | 46,000 | சரக்கிருப்பு | 20,000 |
| | | | கடனாளிகள் | 16,000 |
| பொதுக் காப்பு | | 4,000 | பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டு | 3,000 |
| கடனீந்தோர் | | 37,500 | வங்கி ரொக்கம் | 12,500 |
| | | | இலாப நட்ட க/கு (நட்டம்) | 10,000 |
| | | **87,500** | | **87,500** |

1.4.2017 -இல் பின்வரும் நிபந்தனைகளுடன் கணேசன் என்பவர் புதிய கூட்டாளியாக சேருகிறார்.

(i) கணேசன் $1/5$ இலாபப்பங்கிற்கென ₹ 10,000 முதல் கொண்டு வருகிறார்.

(ii) சரக்கிருப்பு மற்றும் அறைகலன் மதிப்பில் 10% குறைத்து மதிப்பிடப்படுகிறது. கடனாளிகள் மீது 5% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்படுகிறது.

(iii) கட்டடத்தின் மீது 20% மதிப்பேற்றம் செய்யப்படுகிறது.

மறுமதிப்பீட்டு கணக்கு, புதிய கூட்டாளி சேர்க்கைக்குப் பின் உள்ள கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பு தயார் செய்யவும்.



https://www.tamilnaduboard.com

(a) On 1st April 2018 Subha started her business with a capital of ₹ 1,20,000. She did not maintain proper books of accounts. Following particulars are obtained from her books as on 31.3.2019.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Bank overdraft | 50,000 | Stock-in-trade | 1,60,000 |
| Debtors | 1,80,000 | Creditors | 90,000 |
| Bills receivable | 70,000 | Bills payable | 2,40,000 |
| Computer | 30,000 | Cash in hand | 60,000 |
| Machinery | 3,00,000 | | |

During the year she withdrew ₹ 30,000 for her personal use. She introduced further capital of ₹ 40,000 during the year. Calculate her profit or loss.

**OR**

(b) Rajan and Selva are partners sharing profits and losses in the ratio of 3 : 1. Their Balance Sheet as on 31st March 2017 is as under.

| Liabilities | ₹ | ₹ | Assets | ₹ |
|---|---|---|---|---|
| Capital accounts : | | | Building | 25,000 |
| Rajan | 30,000 | | Furniture | 1,000 |
| Selva | 16,000 | 46,000 | Stock | 20,000 |
| | | | Debtors | 16,000 |
| General Reserve | | 4,000 | Bills Receivable | 3,000 |
| Creditors | | 37,500 | Cash at Bank | 12,500 |
| | | | Profit and Loss account (Loss) | 10,000 |
| | | **87,500** | | **87,500** |

On 1.4.2017, they admit Ganesan as a new partner on the following arrangements.

(i) Ganesan brings ₹ 10,000 as capital for $1/5$ share of profit.

(ii) Stock and furniture is to be reduced by 10%, a reserve of 5% on debtors for doubtful debts is to be created.

(iii) Appreciate buildings by 20%.

Prepare Revaluation account, Partner's capital account and the Balance Sheet of the firm after admission of the new partner.



https://www.tamilnaduboard.com

**42.** (அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | உள் திருப்பம் | 50,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | 2019, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | 2019, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 2,40,000 |
| வாராக்கடன் | 30,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |

**அல்லது**

(ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

(a) From the following particulars, calculate total sales.

| **Particulars** | ₹ | **Particulars** | ₹ |
|---|---|---|---|
| Debtors on 1st April 2018 | 2,50,000 | Bills receivable dishonoured | 15,000 |
| Bills receivable on 1st April 2018 | 60,000 | Returns inward | 50,000 |
| Cash received from debtors | 7,25,000 | Bills receivable on 31st March 2019 | 90,000 |
| Cash received for bills receivable | 1,60,000 | Sundry debtors on 31st March, 2019 | 2,40,000 |
| Bad debts | 30,000 | Cash sales | 3,15,000 |

**OR**

(b) Explain any five applications of computerised accounting system.



https://www.tamilnaduboard.com

**43.** (அ) திருச்சி கல்வியியல் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைச் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.1.2018) | 20,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 12,000 |
| முதலீடுகள் செய்தது | 80,000 | அறைகலன் விற்றது | 5,000 |
| மதிப்பூதியம் செலுத்தியது | 3,000 | பொதுச் செலவுகள் | 7,000 |
| நன்கொடை பெற்றது | 80,000 | அஞ்சல் செலவுகள் | 1,000 |
| தணிக்கைக் கட்டணம் செலுத்தியது | 2,000 | சந்தா பெற்றது | 10,000 |

**அல்லது**

(ஆ) ராஜன் நிறுமம் ₹ 6,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை ஜெகன் நிறுவனத்திடமிருந்து வாங்கியது. அது பங்கொன்று ₹ 10 மதிப்புள்ள முற்றிலும் செலுத்தப்பட்ட நேர்மைப் பங்குகளை அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக வழங்கியது. கீழ்க்கண்ட நிலைகளில் பதிய வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

(ii) பங்குகளை 50% முனைமத்தில் வெளியிட்டால்

(a) From the following particulars of Trichy Educational Society, prepare Receipts and Payments account for the year ended 31st December, 2018.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Opening cash balance as on (1.1.2018) | 20,000 | Locker rent received | 12,000 |
| Investments made | 80,000 | Sale of furniture | 5,000 |
| Honorarium paid | 3,000 | General expenses | 7,000 |
| Donation received | 80,000 | Postage | 1,000 |
| Audit fees paid | 2,000 | Subscription received | 10,000 |

**OR**

(b) Rajan Ltd., purchased machinery of ₹ 6,00,000 from Jegan Traders. It issued equity shares of ₹ 10 each fully paid in satisfaction of their claim.
What entries will be made if such issue is made ?

(i) at par

(ii) at a premium of 50%



https://www.tamilnaduboard.com

**44.** (அ) கீழ்க்காணும் திருச்சி மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு கைரொக்கம் | 11,000 | அறைகலன் வாங்கியது | 10,000 |
| | | வாடகை | 2,800 |
| பங்காதாயம் பெற்றது | 27,600 | செயலர் மதிப்பூதியம் | 15,000 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | 3,000 | தபால் செலவுகள் | 1,700 |
| உறுப்பினர் சந்தா | 31,000 | பொதுச் செலவுகள் | 4,350 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | 8,000 | அச்சு மற்றும் எழுதுபொருள்கள் | 45,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 1,250 | தணிக்கைக் கட்டணம் | 5,000 |
| அறைகலன் விற்றது (ஏட்டு மதிப்பு ₹ 4,400) | 5,000 | இறுதி இருப்பு கை ரொக்கம் | 3,000 |
| | **86,850** | | **86,850** |

அல்லது



https://www.tamilnaduboard.com

(ஆ) கலா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2017, மார்ச் 31 | 2018, மார்ச் 31 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| **I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| 1. பங்குதாரர் நிதி | | |
| (அ) பங்கு முதல் | 3,00,000 | 3,60,000 |
| (ஆ) காப்பும் மிகுதியும் | 50,000 | 50,000 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள் | | |
| நீண்டகாலக் கடன்கள் | 50,000 | 40,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | | |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 20,000 | 12,000 |
| **மொத்தம்** | **4,20,000** | **4,62,000** |
| **II. சொத்துகள்** | | |
| 1. நீண்டகாலச் சொத்துகள் | | |
| (அ) நிலைச் சொத்துகள் | 2,50,000 | 2,90,000 |
| (ஆ) நீண்டகால முதலீடுகள் | 50,000 | 40,000 |
| 2. நடப்புச் சொத்துகள் | | |
| சரக்கிருப்பு | 80,000 | 1,00,000 |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள் | 40,000 | 32,000 |
| **மொத்தம்** | **4,20,000** | **4,62,000** |



https://www.tamilnaduboard.com

(a) From the following Receipts and Payments account of Trichy Recreation club, prepare Income and Expenditure account for the year ended 31.03.2018.

| Receipts | ₹ | Payments | ₹ |
|---|---|---|---|
| To opening balance | | By furniture purchased | 10,000 |
| cash in hand | 11,000 | | |
| | | By Rent | 2,800 |
| To Dividend received | 27,600 | By Secretary's honorarium | 15,000 |
| To Sale of old newspapers | 3,000 | By postage | 1,700 |
| To Members' subscription | 31,000 | By General expenses | 4,350 |
| To Locker rent | 8,000 | By Printing and Stationery | 45,000 |
| To Interest on investment | 1,250 | By Audit fees | 5,000 |
| To Sale of furniture | 5,000 | By Closing balance | |
| (Book value ₹ 4,400) | | Cash in hand | 3,000 |
| | **86,850** | | **86,850** |

**OR**

(b) From the following particulars, prepare comparative statement of financial position of Kala Ltd.

| Particulars | 31st March, 2017 ₹ | 31st March, 2018 ₹ |
|---|---|---|
| **I. EQUITY AND LIABILITIES** | | |
| 1. Shareholders' Fund | | |
| (a) Share Capital | 3,00,000 | 3,60,000 |
| (b) Reserves and Surplus | 50,000 | 50,000 |
| 2. Non-current liabilities | | |
| Long-term borrowings | 50,000 | 40,000 |
| 3. Current liabilities | | |
| Trade payables | 20,000 | 12,000 |
| **Total** | **4,20,000** | **4,62,000** |
| **II. ASSETS** | | |
| 1. Non-current assets | | |
| (a) Fixed assets | 2,50,000 | 2,90,000 |
| (b) Non-current investments | 50,000 | 40,000 |
| 2. Current assets | | |
| Inventories | 80,000 | 1,00,000 |
| Cash and Cash equivalents | 40,000 | 32,000 |
| **Total** | **4,20,000** | **4,62,000** |



https://www.tamilnaduboard.com

**45.** (அ) நரேஷ், மணி மற்றும் முத்து ஆகிய கூட்டாளிகள் 2 : 2 : 1 எனும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2019 மார்ச் 31 -ஆம் நாள் நிறுவனத்திலிருந்து முத்து விலகினார். முத்து விலகிய நாளன்று, ஏடுகளில் நற்பெயர் ₹ 40,000 எனக் காட்டியது. அவர்களின் முதல், மாறுபடும் முதல் எனக் கொண்டு, தேவையான குறிப்பேட்டு பதிவுகளைத் தரவும்.

(i) நற்பெயர் முழுவதையும் போக்கெழுத கூட்டாளிகள் முடிவெடுத்தால்

(ii) நற்பெயரில் பாதித்தொகையை போக்கெழுத கூட்டாளிகள் முடிவெடுத்தால்

**அல்லது**

(ஆ) பின்வரும் விவரங்களைக் கொண்டு குறிஞ்சி வரையறு நிறுவனத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ ஆயிரங்களில் | | |
|---|---|---|---|
| | **2015-16** | **2016-17** | **2017-18** |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 120 | 132 | 156 |
| இதர வருமானம் | 50 | 38 | 65 |
| செலவுகள் | 100 | 135 | 123 |

(a) Naresh, Mani and Muthu are partners in a firm sharing profits and losses in the ratio of 2 : 2 : 1. On 31st March 2019, Muthu retires from the firm. On the date of Muthu's retirement, goodwill appeared in the books of the firm at ₹ 40,000. By assuming fluctuating capital method, pass the necessary journal entries if the partners decide to :

(i) Write off the entire amount of existing goodwill.

(ii) Write off half of the amount of existing goodwill.

**OR**

(b) Calculate trend percentages from the following particulars of Kurinji Ltd.

| **Particulars** | **₹ in Thousands** | | |
|---|---|---|---|
| | **2015-16** | **2016-17** | **2017-18** |
| Revenue from operations | 120 | 132 | 156 |
| Other income | 50 | 38 | 65 |
| Expenses | 100 | 135 | 123 |



https://www.tamilnaduboard.com

**46.** (அ) நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடு-களைத் தரவும்.

**அல்லது**

(ஆ) அருள் நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(i) டிசம்பர் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018 -ன் இலாபங்கள் முறையே ₹ 46,000, ₹ 44,000 மற்றும் ₹ 50,000.

(ii) 2016 -ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 5,000 சேர்ந்துள்ளது.

(iii) 2017 -ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹ 10,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.

(a) State the differences between Fixed Capital method and Fluctuating Capital method. https://www.tamilnaduboard.com

**OR**

(b) From the following information relating to Arul Enterprises, calculate the value of goodwill on the basis of 2 years purchase of the average profits of 3 years.

(i) Profits for the years ending 31st December 2016, 2017 and 2018 were ₹ 46,000, ₹ 44,000 and ₹ 50,000 respectively.

(ii) A non-recurring income of ₹ 5,000 is included in the profits of the year 2016.

(iii) The closing stock of the year 2017 was overvalued by ₹ 10,000.



https://www.tamilnaduboard.com

**47.** (அ) புராகிரஸ் வரையறு நிறுமம் 30,000 சாதாரணப் பங்குகளை, பங்குகொன்று ₹ 10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின்போது ₹ 2, ஒதுக்கீட்டின்போது ₹ 4, முதலாவது அழைப்பின்போது ₹ 2 மற்றும் இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 2 செலுத்தப்பட வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன மற்றும் அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

**அல்லது**

(ஆ) மகேஷ் நிறுமத்தின் 2019, மார்ச் 31 -ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| விவரம் | ₹ |
|---|---|
| I. **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| 1. பங்குதாரர் நிதி | |
| நேர்மைப் பங்குமுதல் | 20,00,000 |
| 2. நீண்டகால பொறுப்புகள் | |
| நீண்டகாலக் கடன்கள் | 5,00,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | |
| (அ) குறுகிய காலக் கடன்கள் | 1,70,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 2,50,000 |
| (இ) இதர நடப்புப் பொறுப்புகள் | |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 30,000 |
| (ஈ) குறுகியகால ஒதுக்குகள் | 50,000 |
| **மொத்தம்** | **30,00,000** |
| II. **சொத்துகள்** | |
| 1. நீண்டகால சொத்துகள் | |
| (அ) நிலைச் சொத்துகள் | |
| புலனாகும் சொத்துகள் | 15,00,000 |
| 2. நடப்புச் சொத்துகள் | |
| (அ) சரக்கிருப்பு | 4,50,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகள் | 7,00,000 |
| (இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள் | 3,00,000 |
| (ஈ) இதர நடப்புச் சொத்துகள் | |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 50,000 |
| **மொத்தம்** | **30,00,000** |

(i) நடப்பு விகிதம் (ii) நீர்மை விகிதம் கணக்கிடவும்



https://www.tamilnaduboard.com

(a) Progress Ltd., issued 30,000 ordinary shares of ₹ 10 each, payable ₹ 2 on application, ₹ 4 on allotment, ₹ 2 on first call and ₹ 2 on second and final call. All the shares are subscribed and amount was duly received. Pass journal entries.

**OR**

(b) Following is the Balance Sheet of Magesh Ltd., as on 31$^{st}$ March 2019.

| Particulars | ₹ |
|---|---|
| **I. EQUITY AND LIABILITIES** | |
| 1. Shareholder's fund | |
| Equity share capital | 20,00,000 |
| 2. Non-current liabilities | |
| Long term borrowings | 5,00,000 |
| 3. Current liabilities | |
| (a) Short-term borrowings | 1,70,000 |
| (b) Trade payable | 2,50,000 |
| (c) Other current liabilities | |
| Expenses payable | 30,000 |
| (d) Short-term Provisions | 50,000 |
| **Total** | **30,00,000** |
| **II. ASSETS** | |
| 1. Non-current assets | |
| Fixed assets | |
| (a) Tangible assets | 15,00,000 |
| 2. Current assets | |
| (a) Inventories | 4,50,000 |
| (b) Trade receivable | 7,00,000 |
| (c) Cash and Cash equivalents | 3,00,000 |
| (d) Other current assets | |
| Prepaid expenses | 50,000 |
| **Total** | **30,00,000** |

**Calculate :**

(i) Current ratio (ii) Quick ratio

- o O o -



https://www.tamilnaduboard.com